மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
அ.வ.எண். 224 / 2022
வா.சா.1

தேதி : 24.4.2023

பெயர் : மணி என்ற முருகை த/பெ :
வயது : தொழில் :
கிராமம்: மாவட்டம்:

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வாதி தரப்பு 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். ,கீழ்க்கண்ட ஆவணங்களை எனதுதரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

20.2.1981 தேதியில் எனக்கு 2ம்தபசில்சொத்தை பொறுத்து தங்கவேல், சுப்பையா ஆகியோர் இருவரும் எழுதிக்கொடுத்த பதிவுகிரைய பத்திரம் சார்பதிவக அலுவலக கணிணி பதிவிறக்க நகல் வாசாஆ 1.

வழக்குரை 2ம் தபசில் புல எண்ணிற்கு பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா வா.சா.ஆ.2.

வழக்குரை 2ம் தபசில் புல எண்ணிற்கு பதிவிறக்கம் செய்யப்பட்டபுலவரைபடம் வா.சா.ஆ.3.

22.10.2022 தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வழக்குரை 2ம் தபசில் சொத்துக்குரிய வில்லங்க சான்றிதழ் வாசாஆ 4.

20.2.81 தேதியிட்ட எனது சகோதரர் சுடலைமணிக்கு வழக்குரை 3ம் தபசில் சொத்தை பொறுத்து தங்கவேல், சுப்பையாஆகிய இருவரும் எழுதிக்கொடுத்த பதிவுகிரைய பத்திரம் சார்பதிவக அலுவலக நகல் வாசாஆ 5.

20.2.1981 தேதியில் எனது பெரியம்மா மகன் சுப்பிரமணியனுக்கு தங்கவேல், சுப்பையா ஆகியோர்எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் சார்பதிவக அலுவலக நகல் வாசாஆ 6.

25.9.2020 தேதியில் 1, 2 பிரதிவாதிகள், ஜெயந்தி ஆகிய மூவரும் வழக்குரை 3ம் தபசில் சொத்தை பொறுத்து ராஜேந்திரனுக்கு எழுதிக்கொடுத்த பதிவுகிரைய பத்திரம் சார்பதிவக அலுவலக கணிணி வழி பதிவிறக்க நகல் வாசாஆ 7.

4.5.2022 தேதியில் 1, 2 பிரதிவாதிகள், வழக்குரை 2ம் தபசில் சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவுகிரைய பத்திரம் சார்பதிவக அலுவலக கணிணி வழி பதிவிறக்க நகல் வாசாஆ 8.

பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

ஒ/ம்–சா.முத்துலெட்சுமி, பி.ஏ.எம்.எல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஸ்ரீவைகுண்டம்.